DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure
**IN THE COURT OF SESSIONS JUDGE, NAGAPATTINAM.**
**Sessions Case No. 7 / 2019**

Deposition of Witness for Prosecution : P.W. 1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | : பரமேஸ்வரன் | **தந்தை பெயர்** | : பொன்மலை |
| **ஊர்** | : மாவுரெட்டிபட்டி | **தாலுக்கா** | : திருச்செங்கோடு |
| **ஜாதி** | : | **வயது** | : 28 |
| **மதம்** | : | **தொழில்** | : கிராம நிர்வாக அலுவலர் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 09.03.2021.

**முதல் விசாரணை**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தாலுக்கா, மாவுரெட்டிபட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 2018ம் ஆண்டு அக்டோபர் மாதம்வரை நான் நாகப்பட்டினம் தாலுக்கா, நம்பர்.10, அருண்மொழித்தேவன் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்துவந்தேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியும். 12.02.2018ம் தேதி அன்று காலையில் நான் என்வீட்டில் இருந்தபோது காலை சுமார் 8.30 மணி அளவில் அருண்மொழித்தேவன் கிராமத்தில் உள்ள நரிதின்னவாய்க்கால் என்ற இடத்தில் ஓர் ஆண் பிரேதம் இருப்பதாக எனக்கு தகவல் கிடைத்தது. அதன்பேரில் நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன். அந்த இடத்தில் பாதி எரிந்தும், பாதி எரியாத நிலையில் ஓர் ஆண் சடலம் இருந்தது. அங்கு ஊர் மக்கள் நிறையபேர் இருந்தார்கள். நான் அங்கிருந்தவர்களை விசாரித்தபோது அந்த இறந்த நபர் நிரவி கிராமம், ஊழியபத்து என்ற ஊரை சேர்ந்த வடிவேல் என்பவரின் மகன் மகேந்திரன் என்று சொன்னார்கள். பின்னர் நான் என் அலுவலகம் சென்று ஒரு புகார் தயாரித்து, அந்த புகாரினை திட்டச்சேரி காவல்நிலையத்தில் காலை 9.30 மணி அளவில் கொடுத்தேன். அந்த புகார்தான் என்னிடம் காட்டப்படுவது ஆகும், அது **அ.சா.ஆ.1 ஆகும்**. அதன்பேரில் போலீஸார் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தார்கள். என்னை சம்பவ இடத்திற்கு செல்லசொல்லிவிட்டார்கள். சம்பவ இடத்திற்கு நாகூர் போலீஸாரும், திட்டச்சேரி போலீஸாரும் காலை சுமார் 11.00 மணி அளவில் வந்தார்கள். போலீஸார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து கொண்டார்கள். போலீஸார் மதியம் 1 மணி அளவில் மேற்படி பிரேதத்தை பிணகூறாய்வு செய்வதற்காக மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு என்னை என் அலுவலகத்திற்கு போகசொல்லிவிட்டார்கள். அன்று நான் அலுவலகத்தில் தான் பணியில் இருந்தேன். அன்றைய தினம் மாலை சுமார் 5.00 மணி அளவில் காரைக்காலை சேர்ந்த செந்தில், த/பெ.சுப்பிரமணியம் என்பவர் என்

அலுவலகம் வந்து அடங்கல் கணக்கு சம்மந்தமாக சந்தேகம் கேட்டுக் கொண்டிருந்தார். அதுசமயம் ஆஜர் எதிரிகள் இருவரும் என் அலுவலகம் வந்தார்கள். அவர்கள் மேற்படி மகேந்திரன் என்பவரின் இறப்பு சம்மந்தமாக என்னிடம் பேசவேண்டுமென்று சொன்னார்கள். நான் அவர்களை விசாரித்தபோது ஆஜர் 2ம் எதிரி தான் மேற்படி மகேந்திரன் மனைவி கீதா என்றும், ஆஜர் 1ம் எதிரி தான் மேற்படி மகேந்திரனின் நண்பர் என்றும் சொன்னார்கள். அதற்கு முன்பே எனக்கு ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும். மேற்படி மகேந்திரனுக்கு அருண்மொழிதேவன் கிராமத்தில் சாகுபடி நிலங்கள் உள்ளன, அவற்றில் மகேந்திரன் சாகுபடி செய்துவந்தார். நான் ஆஜர் எதிரிகள் இருவரும் சொன்ன வாக்குமூலத்தை கணினியில் தட்டச்சு செய்துகொண்டேன், இடையில் நாகூர் காவல்நிலைய ஆய்வாளருக்கு தகவல் சொன்னேன். ஆஜர் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம்தான் என்னிடம் காட்டப்படுவது ஆகும். அது அ.சா.ஆ.2 ஆகும். அதேபோல் ஆஜர் 2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம்தான் என்னிடம் காட்டப்படுவது ஆகும். அது **அ.சா.ஆ.3 ஆகும்**. (எதிரிகள் தரப்பில் மேற்படி சாட்சி காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததற்கு பின்னர் அவ்வாறு வாக்குமூலம் பதிவுசெய்ததாக சொல்வதால் அவை ஏற்கத்தக்கதல்ல என்று ஆட்சேபணை செய்யப்பட்டது). பின்னர் மாலை 5.45 மணி அளவில் போலீஸார் என் அலுவலகம் வந்தார்கள். போலீஸார் ஆஜர் எதிரிகளிடம் தனித்தனியாக விசாரித்து ஒப்புதல் வாக்குமூலங்களை பெற்றார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலங்களில் நானும், மேற்படி செந்தில் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். ஆஜர் எதிரிகள் அவரவர் சம்மந்தப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தார்கள். ஆஜர் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் இறுதிபகுதியில் தன்னை அழைத்துசென்றால் கைகோடாரியையும், இருசக்கர வாகனத்தையும் எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.4 ஆகும்**. அதேபோல் ஆஜர் 2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் இறுதிபகுதியில் தன்னை அழைத்துசென்றால் 5 லிட்டர் டீசல் கேனையும், தன்னுடைய புடவையையும் எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.5 ஆகும்**. அதன்பிறகு இரவு 8.30 மணி அளவில் ஊழியபத்து, படுகை தெருவில் உள்ள ஆஜர் 1ம் எதிரியின் வீட்டிற்கு சென்றோம். அங்கு ஆஜர் 1ம் எதிரி தன்னுடைய பல்சர் இருசக்கர வாகனம், கைக்கோடாரி-1, அவருடைய முழுக்கை சட்டை-1, கைலி-1 ஆகியவற்றை மறைத்து வைத்திருந்ததை ஆஜர் 1ம் எதிரி எடுத்து ஆஜர் படுத்தியதை போலீஸார் மகஜரில் கைப்பற்றினார்கள். அதில் நானும், மேற்படி செந்தில் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.6 ஆகும்**. அவ்வாறு போலீஸார் கைப்பற்றிய கைக்கோடாரி **அ.சா.பொ.1 ஆகும்**. அவ்வாறு போலீஸார் கைப்பற்றிய முழுக்கை சட்டை **அ.சா.பொ.2 ஆகும்**. அவ்வாறு போலீஸார் கைப்பற்றிய கைலி **அ.சா.பொ.3 ஆகும்**. அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள PY-02 R-7332 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். ( மேற்படி PY-02 R-7332 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் 1ம் எதிரியிடம் மனுவின்மீது இடைக்காலமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது, அந்த வாகனம் இன்று ஆஜர் 1ம் எதிரியால் ஆஜர்

படுத்தப்படவில்லை). பின்னர் ஆஜர் 2ம் எதிரி கீதா மேற்படி ஊழியபத்து, மெயின்ரோட்டில் உள்ள அவரது வீட்டிற்கு அழைத்துசென்று அவர் வீட்டில் மறைத்து வைத்திருந்த கேன் மற்றும் புடவையை எடுத்து ஆஜர் செய்தார். அதை போலீஸார் மகஜரில் கைப்பற்றினார்கள். அதில் நானும், மேற்படி செந்தில் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.7 ஆகும்**. அவ்வாறு போலீஸார் கைப்பற்றிய பிளாஸ்டிக் கேன் **அ.சா.பொ.4 ஆகும்**. அவ்வாறு போலீஸார் கைப்பற்றிய புடவையை தற்போது என்னால் நினைவு படுத்தி சொல்லமுடியவில்லை. பின்னர் போலீஸார் ஆஜர் எதிரிகளையும், மேற்படி கைப்பற்றப்பட்ட சான்றுப்பொருட்களையும் எடுத்துக்கொண்டு காவல்நிலையம் சென்றுவிட்டார்கள். போலீஸார் இதுசம்மந்தமாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து கொண்டனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த வழக்கு வாக்குமூலத்தை நன்றாக மனப்பாடம் செய்து போலீஸார் சொல்லிக்கொடுத்ததன்படி அதை ஒப்புவிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 12.02.2018ம் தேதி அன்று காலையில் எவ்வளவு நேரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தபோது இருந்தேன் என்றால் காலை 9.30 மணிக்கு சென்றேன், சுமார் 20 நிமிடங்கள் அங்கு இருந்திருப்பேன். அ.சா.ஆ.1 புகாரை நான் காவல்நிலையத்தில் வைத்து எழுதினேனா என்றால் இல்லை, என் அலுவலகத்தில் வைத்து எழுதினேன். போலீஸார் என்னிடம் முதல் தகவல் அறிக்கையின் நகலை கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் காவல்நிலையத்தில் கொடுத்த புகார், ஆஜர் எதிரிகள் என்னிடம் கொடுத்த வாக்குமூலங்கள் ஆகியவற்றை தலா 3 பிரதிகள் எடுத்து ஒன்றை போலீஸாருக்கும், ஒன்றை வட்டாட்சியருக்கு அனுப்பியும், மற்றொன்றை எனது அலுவலகத்திலும் வைத்துக்கொள்ள வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு அ.சா.ஆ.1 புகார் அல்லது ஆஜர் எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்கள் அவ்வாறு 3 பிரதிகள் தயார் செய்யப்பட்டதாக குறிப்பு எதுவும் இல்லை என்றால் அவ்வாறு 3 பிரதிகள் தயாரித்தேன், ஆனால் அதன் குறிப்பு எழுதினேனா என்று ஞாபகமில்லை. நான் அவ்வாறு 3 பிரதிகள் தயாரிக்கவில்லை என்றும், வட்டாட்சியருக்கும், போலீஸாருக்கும் நகல்கள் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் அவ்வாறு 12.02.2018ம் தேதி அன்று காலை திட்டச்சேரி காவல்நிலையம் சென்றபோது காவல்நிலையத்தில் யார் இருந்தார்கள் என்றால் திருமதி. மணிமேகலை என்ற உதவி காவல் ஆய்வாளர் இருந்தார். நான் அவ்வாறு காவல்நிலையம் சென்றபோது அந்த சமயத்தில் ஆஜர் எதிரிகள் காவல்நிலையத்தில் இருந்தார்கள் என்றால் அவர்களை நான் காவல்நிலையத்தில் பார்க்கவில்லை. ஆஜர் எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களில் அதை கணினியில் தட்டச்சு செய்தது யார் என்ற குறிப்பு இல்லையென்றால் அதை நான்தான் தட்டச்சு செய்தேன், ஆனால் தட்டச்சு செய்தவர் என்ற குறிப்பு அதில் இல்லை. ஆஜர் எதிரிகள் என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தபோது அதை வரிசைபட அவர்களே சொன்னார்களா அல்லது கேள்வி, பதிலாக பெற்றேனா என்றால் அவர்கள் சொல்ல சொல்ல நான் தட்டச்சு செய்துகொண்டேன். அவர்கள் சொன்னதை அதே வார்த்தை வடிவமைப்பில் தட்டச்சு

செய்தேனா அல்லது அதை என் நடையில் பொருள்மாறாமல் மாற்றி தட்டச்சு செய்துகொண்டேனா என்றால் அவர்கள் சொன்ன வார்த்தைகளில்தான் தட்டச்சு செய்தேன். என்னை போலீஸார் எங்கு விசாரித்தார்கள் என்றால் மேற்படி சடலம் இருந்த இடத்தில் விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து கொண்டார்கள். அந்த வாக்குமூலத்தை யார் கைப்பட எழுதினார்கள் என்றால் அவர்கள் மடிக்கணினி வைத்திருந்தார்கள் அதில் தட்டச்சு செய்துகொண்டார்கள். அவ்வாறு தட்டச்சு செய்தது யார் என்றால் அது எனக்கு நினைவில்லை. எனக்கு யார் தட்டச்சு செய்தது என்று தெரியாததால் மழுப்பலாக நினைவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீஸார் விசாரணையில் அவ்வாறு ஆஜர் எதிரிகளை எனக்கு முன்பே தெரியும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் போலீஸார் கேட்கவில்லை, நானும் சொல்லவில்லை. எனக்கு ஆஜர் எதிரிகளை முன்பே தெரியாது என்றும், வழக்கிற்காக அவ்வாறு அவர்களை முன்பே தெரியும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு ஆஜர் எதிரிகளை அதற்கு முன்பு எப்போது பார்த்துள்ளேன் என்றால் மேற்படி மகேந்திரன் என்பவர் அடங்கல் கணக்கு வாங்க வந்தபோது ஆஜர் எதிரிகளை பார்த்துள்ளேன். ' அது எந்த தேதி, மாதம் என்றால் அது நினைவில்லை. நான் சொல்வதுபோல் ஆஜர் எதிரிகளை அதற்கு முன்பு பார்க்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் சென்றதாக சொல்லும் மெயின்ரோட்டில் உள்ள வீடு 2ம் எதிரியின் தாயார் வீடா அல்லது கணவர் வீடா என்றால் அது எனக்கு தெரியவில்லை. அந்த வீட்டின் வாசல் எந்த திசை நோக்கி இருந்தது என்றால் நினைவில்லை. அதேபோல் 1ம் எதிரியின் வீட்டின் வாசல் எந்த திசை நோக்கி இருந்தது என்றால் நினைவில்லை. நான் சொல்வதுபோல் ஆஜர் எதிரிகளின் வீடுகளுக்கு நான் செல்லவில்லை என்றும், எனவேதான் அவர்களின் வீட்டின் வாசல் எந்த திசையில் உள்ளது என்று எனக்கு தெரியவில்லை என்றால் அது இரவுநேரம் என்பதால் எனக்கு திசை தெரியவில்லை. அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ7 கைப்பற்றுதல் மகஜர்களை எந்த போலீஸார் தன் கைப்பட எழுதினார் என்றால் அது நினைவில்லை. நான் சொல்வதுபோல் அவ்வாறு எந்த சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும், எனவேதான் என்னால் அந்த கைப்பற்றுதல் மகஜர்களை யார் எழுதினார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. நான் அவ்வாறு காவல்நிலையம் சென்று புகார் கொடுப்பதற்கு முன்பே போலீஸாருக்கு மகேந்திரனின் இறப்பு பற்றி தகவல் தெரியும் என்றால் அவ்வாறு போலீஸா என்னிடம் குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் சொல்வதுபோல் ஆஜர் எதிரிகள் இருவரும் எனது அலுவலகத்திற்கு வரவில்லை என்றும், நான் காவல்நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டு அங்கு காவல் ஆய்வாளர் சொல்ல சொல்ல ஆஜர் எதிரிகள் கொடுத்ததாக சொல்லும் வாக்குமூலங்கள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளன என்றும், அதில்தான் நான் அவ்வாறு கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வாக்குமூலங்களில் உள்ள கையொப்பங்களை ஆஜர் எதிரிகள் போடவில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே என்னிடம் ஆஜர் எதிரிகள் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லும் நிலையில் அதன் பின்னிட்டு போலீஸார் என்னிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக இந்த வழக்கிற்காக போலீஸாரால் ஜோடிக்கப்பட்டுள்ளது என்றும், அதனை ஒத்து நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீஸார் சொன்னபடி நான் சாட்சியமளிப்பேன் என்பதால் இவ்வழக்கில் என்னை

சாட்சியாக போலீஸார் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் ஆஜர் எதிரிகள் போலீஸாரால் என் அலுவலகத்தில் வைத்து கைதுசெய்யப்படவில்லை என்றும், அதன்பேரில் அவர்கள் எந்த ஒப்புதல் வாக்குமூலங்களும் கொடுக்கவில்லை என்றும், அதன் அடிப்படையில் எந்த சான்றுப் பொருள்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தப்பட்ட அனைத்து ஒப்புதல் வாக்குமூலங்களும் போலீஸாரும், நானும் சேர்ந்து போலீஸார் சொன்னபடி வழக்கிற்கு ஏற்ப பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.

DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure
**IN THE COURT OF SESSIONS JUDGE,**
**NAGAPATTINAM.**
**Sessions Case No. 7 / 2019**

Deposition of Witness for Prosecution : P.W. 2

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | : மனோகரன் | **தந்தை பெயர்** | : வடிவேல் |
| **ஊர்** | : ஊழியப்பத்து | **தாலுக்கா** | : காரைக்கால் |
| **ஜாதி** | : | **வயது** | : 43 |
| **மதம்** | : | தொழில் | : விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 09.03.2021.

**முதல் விசாரணை**

நான் காரைக்கால் ஊழியப்பத்து, மெயின்ரோட்டில் எனது குடும்பத்துடன் வசித்துவருகிறேன். நான் விவசாய தொழில் செய்கிறேன். நான் வன்னியர் சமூகத்தை சேர்ந்தவர். இந்த வழக்கில் இறந்துபோன மகேந்திரன் எனக்கு உடன்பிறந்த தம்பி ஆவார். ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியும். ஆஜர் 2ம் எதிரி என் தம்பி மகேந்திரனின் மனைவி ஆவார். மகேந்திரன்-கீதா தம்பதிகளுக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளனர். அவர்கள் பெயர் கோமதி மற்றும் அனுஷ்கா ஆகும். என் தம்பி மகேந்திரன் உயிருடன் இருந்த காலத்தில் கொத்தனார் வேலை மற்றும் மீன்பிடிக்கும் தொழில் செய்தார். என் தம்பி மகேந்திரனுக்கு குடிபழக்கம் இருந்தது. அதனால் அவர் தினமும் மது குடித்துவிட்டு வந்து ஆஜர் 2ம் எதிரியை அடிப்பார். அவ்வாறு அடிக்கும்பொழுது ஆஜர் 2ம் எதிரி என்னிடமும், என் அண்ணன் மற்றும் எங்கள் உறவினர்களிடம் சொல்வார். நான் என் தம்பி மகேந்திரனை கூப்பிட்டு கண்டிப்பேன். நான் சொல்லும்போது என் தம்பி கேட்டுக்கொள்வார், ஆனால் மீண்டும் மது குடித்துவிட்டு வந்து ஆஜர் 2ம் எதிரியை அடிப்பார். ஆஜர் 1ம் எதிரி எங்கள் ஊரில் பக்கத்து தெருவில் உள்ளார். அவரும் கொத்தனார் வேலை மற்றும் மீன்பிடிக்கும் தொழில் செய்வார். ஆஜர் 1ம் எதிரி என் தம்பியோடு வேலைக்கு போவார். ஆஜர் 1ம் எதிரியும், என் தம்பியும் நெருங்கிய கூட்டாளிகள். அதனால் ஆஜர் 1ம் எதிரி, என் தம்பி மகேந்திரன் வீட்டிற்கு அடிக்கடி வருவார். அதனால் ஆஜர் 1ம் எதிரிக்கும், ஆஜர் 2ம் எதிரிக்கும் இடையில் தகாத உறவு ஏற்பட்டுவிட்டது. அவ்வாறு தகாத உறவு இருப்பது பற்றி அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள். என் தம்பி மகேந்திரன் இறப்பதற்கு 3 மாதங்களுக்கு முன்பு அவர் வீட்டு பின்புறத்தில் ஆஜர் எதிரிகள் இருவரும் கட்டிபிடித்துக்கொண்டு இருப்பதை என் அண்ணன் கார்த்திகேயன் பார்த்துவிட்டு என் தம்பி மகேந்திரனிடம் சொன்னார். ஆனால் அதை என் தம்பி மகேந்திரன் நம்பவில்லை. அதனால் எங்களுக்குள் மனவருத்தம் ஏற்பட்டு பேச்சுவார்த்தை இல்லாமல்

போய்விட்டது. நான் தனிப்பட்ட முறையில் ஆஜர் 1ம் எதிரியை அழைத்து கண்டித்தேன். 11.02.2018 ம் தேதி அன்று என் அண்ணன் கந்தவேல், என் தம்பி மகேந்திரனிடம் டீசல் வாங்கிக்கொண்டு வயலுக்கு போகுமாறு சொல்லியுள்ளார். அன்று இரவு 10.00-10.45 மணிக்குள் ஆஜர் 1ம் எதிரியும், என் தம்பி மகேந்திரனும் டீசல் வாங்கிக்கொண்டு வண்டியில் போனதை என் அண்ணன் கந்தவேல் பார்த்ததை என்னிடம் சொன்னார். அன்று இரவு 12.00-1.00 மணிக்குள் என் தம்பி மகேந்திரன் வயல் தலைமாட்டில் எரிந்துகிடப்பதாக என் அண்ணன் கந்தவேல் என்னிடம் தொலைபேசி மூலமாக தகவல் சொன்னார். என் அண்ணன் கந்தவேலுக்கு மற்றொரு பெயர் செந்தில் ஆகும். அவ்வாறு தொலைபேசி மூலம் தகவல் கிடைத்தவுடன் நாங்கள் ஊரில் 6-7 பேர் சேர்ந்து சென்று பார்த்தோம். அங்கு என் தம்பி மகேந்திரன் எரிந்தநிலையில் இறந்துகிடந்தார். அதுசமயம் பொழுது விடிந்துவிட்டது. கிராம நிர்வாக அலுவலர் வந்து பார்த்துவிட்டு திட்டச்சேரி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். அதன்பிறகு போலீஸார் வந்து எங்களை விசாரித்தார்கள். நான் வாக்குமூலம் கொடுத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் நான், என் சகோதரர்கள் கார்த்திகேயன், கந்தவேல் மற்றும் கார்த்திகேயன் மனைவி ஈஸ்வரி ஆகியோர் சாட்சிகள் என்றால் சரிதான். இந்த வழக்கில் எங்கள் தரப்பில் மூத்த வழக்கறிஞர் திரு.ஸ்ரீதரன் என்பவரை அரசு தரப்பு வழக்கிற்கு துணையாக நியமித்துள்ளோம் என்றால் சரிதான். நான் போலீஸாரும், என் வழக்கறிஞரும் சொல்லிக்கொடுத்தது போல் ஒப்புவித்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தம்பி மகேந்திரன் மது அருந்திவிட்டு ஆஜர் 2ம் எதிரியை அடிப்பார் என்று நான் சொல்வது எந்த எந்த தேதி என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் அவர் தினமும் குடித்துவிட்டு அவ்வாறு அடிப்பதால் தேதி குறிப்பிட்டு சொல்லமுடியாது. அவ்வாறு என் தம்பி மகேந்திரன் தினமும் மது அருந்திவிட்டு ஆஜர் 2ம் எதிரியை அடிப்பார் என்று நான் போலீஸார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆஜர் 2ம் எதிரிக்கும், என் தம்பி மகேந்திரனுக்கும் நான் சொல்வதுபோல் சண்டை ஏற்பட்டதில்லை என்றும், என் தம்பி ஆஜர் 2ம் எதிரியை அடித்தது இல்லை என்றும், எனவே 2ம் எதிரி என்னிடம் அதுபற்றி சொன்னது இல்லை என்றால் சரியல்ல. ஆஜர் 2ம் எதிரியின் வீட்டின் பின்புறத்தில் எதிரிகள் இருவரும் ஒன்றாக இருக்கவும் இல்லையென்றும், அதை என் அண்ணன் காத்த்திகேயன் பார்த்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்குள் எவ்வித தவறான உறவும் இல்லையென்றும், இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 11.02.2018 தேதி அன்று ஆஜர் 1ம் எதிரியும், என் தம்பி மகேந்திரனும் டீசல் வாங்கிக்கொண்டு ஒன்றாக செல்லவில்லை என்றும், எனவே அதை என் அண்ணன் பார்க்கவில்லை என்றும், என்னிடமும் நான் சொல்வதுபோல் தகவல் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் சகோதரி இலஞ்சியம் என்பவரின் திருமணத்திற்காக ஆஜர் 2ம் எதிரி-மகேந்திரன் ஆகியோர் 13 சவரன் தங்க நகைகள் கொடுத்தார்கள் என்றும், அதை அவர்கள் திருப்பி கேட்டார்கள் என்றும், அதனால் சகோதரர்களுக்குள் விரோதம் இருந்தது என்றால்

சரியல்ல. நானும், என் அண்ணன் கந்தவேல் மற்றும் என் தம்பி மகேந்திரன் ஆகியோர் நிலங்களை தனித்தனியாக குத்தகைக்கு எடுத்து உழவடை செய்துவந்தோம் என்றால் சரிதான். என் தம்பி மகேந்திரன் விவசாயம் செய்துவந்த நிலத்தை நானும், என் அண்ணன் கந்தவேலும் கைப்பற்ற நினைத்தோம் என்றும், அதுசம்மந்தமாக எங்களுக்குள் முன்விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. என் தம்பி மகேந்திரன் இறந்ததற்கு நாங்கள்தான் காரணம் என்றால் சரியல்ல. என் தம்பி இறந்தது சம்மந்தமாக நாங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுக்காமல், கிராம நிர்வாக அலுவலர் புகார் கொடுத்ததற்கு தனிப்பட்ட காரணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை, அதுசமயம் நாங்கள் துக்கத்தில் இருந்தோம். என் தம்பியின் இறப்பிற்கு நாங்கள் காரணம் என்பதால்தான் காவல்நிலையம் செல்ல நாங்கள் துணியவில்லை என்றால் சரியல்ல. அன்றைய தேதியில் என்னையும், என் இரண்டு அண்ணன்களையும் போலீஸார் சந்தேகத்தின்பேரில் காவல்நிலையத்தில் வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. அன்றைய தேதியிலும், எந்த சந்தர்ப்பத்திலும் நான் இந்த வழக்கு சம்மந்தமாக திட்டச்சேரி காவல்நிலையம் செல்லவில்லையா என்றால் இல்லை. என்னை போலீஸார் சம்பவ இடத்திலேயே விசாரித்தாகளா என்றால் ஆமாம் 12.02.2018 தேதி அன்று காலை 10.30 மணிஅளவில் சம்பவ இடத்தில் போலீஸார்கள் என்னை விசாரித்தார்கள், நான் சொன்னதை அவர்கள் தட்டச்சு செய்துகொண்டார்கள். இந்த வழக்கிற்காக நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள முன்விரோதங்கள், ஆஜர் 1ம் எதிரியையும், என் தம்பி மகேந்திரனையும் 11.02.2018 தேதி அன்று இரவு டீசல் வாங்கி சென்றதாகவும், அதை என் அண்ணன் செந்தில் என்கிற கந்தவேல் பார்த்ததாகவும், அதை என்னிடம் சொன்னதாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் ஆஜர் 1ம் எதிரியும், என் தம்பி மகேந்திரனும் அன்றைய தேதியில் டீசல் வாங்க ஒன்றாக செல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் மிகைப்படுத்தி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும்படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது).**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>